# இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனைகள்

**முனைவர் ம. கீதா**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனம்
கோயம்புத்தூர்

மனிதவாழ்வு விழுமிய சிறப்பினைக் கொண்டது. பண்டைய தமிழர்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் இலக்கியங்கள் நமக்குபறை சாற்றுகின்றன. மக்களின் வாழ்க்கையானது காலந்தோறும் பல்வேறு மாற்றங்களையும் ஏற்றங்களையும் பெற்றுவந்துள்ளது. அவ்வாறு ஏற்பட்டமாற்றங்களை அக்கால இலக்கியப் பதிவுகளின் மூலம் அறியமுடிகின்றது. ஏனெனில் இலக்கியமானது அந்தந்தகால கட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைக் கூறுகளை முன்வைத்து படைக்கப்பட்டுள்ளன. அவ்விலக்கியங்கள் மனிதகுலத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்டிச் சென்றுள்ளதையும் அறிந்து கொள்ளமுடிகின்றது. ஆகவேதான் இலக்கியம் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்பர். இலக்கியத்தில் காணலாகும் வாழ்வியல் சிந்தனைகள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மலர்:** 3

**சிறப்பிதழ்:** 3

**தொகுதி:** IV

**மாதம்:** மார்ச்

**வருடம்:** 2019

**ISSN:** 2454-3993

**கல்வியின் சிறப்பு**

கல்வியிற் சிறந்ததமிழ்நாடு என்று தமிழகத்தைச் சான்றோர் பாராட்டுவர். கல்வி என்பது மனிதனுக்கு அவசியமானது. உலகியல் அறிவு பெற கல்வி தேவைப்படுகிறது. இன்றைய உலகில் அறிவுபெரும் மதிப்பாகப் பாராட்டப் பெறுகின்றது. 'கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்று பண்டையகாலம் முதல் கல்வியின் சிறப்பு வலியுறுத்தப்படுகிறது. ஒருதாய் வயிற்றில் பிறந்தவர் ஆனாலும் கல்வியுடைய ஒருவனே மதிக்கப்படுவான். கல்வி அறிவுடைய ஒருவனை அரசனும் சென்று போற்றுவான். கீழ் நிலையிலுள்ள ஒருவனிடம் கல்வி அறிவு இருந்தால் மேல்குடிப் பிறந்தவனும் அவனைப் பணிவான். இப்படிப்பட்ட கல்வியை உதவிசெய்தும், மிகுதியான பொருளைக் கொடுத்தும் கற்கவேண்டும் என்பதை,

**"உற்றுழிஉதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலைமுனியாதுகற்றல் நன்றே"** **(புறம் - 183)**

என்ற வரிகளின் மூலம் அறியமுடிகின்றது.

கல்விச் செல்வமே சிறந்த நிலைத்த புகழைத் தரும் செல்வம் என்பதை வள்ளுவரும்,

**"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்பவாழும் உயிர்க்கு"** **(குறள் - 392)**

என்ற குறளின் மூலம் கூறியுள்ளார். புற அழகெல்லாம் அழகல்ல அகத்தில் உள்ள கல்வியே சிறந்த அழகு என்று நாலடியும், பிச்சைபுகினும் கற்கை நன்றே என்று ஔவையார் கூறுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

**இல்வாழ்க்கை**

இல்லத்தில் இருந்து அகவாழ்வை மேற்கொள்வது இல்லறம் எனப்படும். இல்லறம், துறவறம் என்ற இரண்டில் இல்லறமே அறன் என்பதை,

**'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை'** (குறள் - 49)

என்றும்,

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது** (குறள் - 45)

என்றும் கூறுவதால் இல்வாழ்க்கையில் அன்பாகிய பண்பும் அறனாகிய பயனும் இருத்தல் வேண்டும் என வள்ளுவர் கூறுகிறார்.

தலைவன் தலைவியரிடையே வளரும் காதல் நிலையான தன்மையுடையது. கற்புக் காலத்தில் இல்லறத்தில் தலைப்படும் பொழுது அவர்களது இல்லற மாண்பையும், கணவனுக்கு விருந்துபேணும் சிறப்பையும் காணமுடிகின்றது. திருமணமான புதிதில் தலைவி தலைவனுக்குத் தானே உணவு சமைத்து பரிமாறுகிறாள். அனுபவக் குறைவாலும், விரைவாலும் மிகமுயன்று சமைத்த மனைவியின் சமையலைக் கணவன் இனிது இனிது எனஉண்ண, அவனின் பேரன்பினை எண்ணி மனைவி மகிழ்ச்சியடைகிறாள். இதனை,

**"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅதுஉடீஇக்**
**குவளை உண்கண் குய்ப்புகைகமழத்**
**இனிதெனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"** (குறுந் - 167)

என்ற பாடலின் வழி தலைவன் தலைவியின் இல்லற மாண்பினைக் காணமுடிகின்றது. மேலும் தலைவன் தலைவி இருவர் மாட்டும் உள்ள அன்பும், உறவும் பிறவி தோறும் தொடரவேண்டும் என்பது தலைவியின் விருப்பமாகும்.

**"இம்மை மாறி மறுமையாயினும்**
**நீயாகியரென் கணவன்**
**யானாகியர்நின் நெஞ்சுநேர் பவளே"** (குறுந் - 49)

என்ற பாடலடிகளில் இந்தப்பிறவி மட்டுமல்லாமல், மறுபிறப்பு உண்டாயினும் என்னுடைய தலைவன் நீயே ஆக வேண்டும் என்றும் நின்னுடைய மனத்திற்கு ஒத்த மனைவியாக நானே இருக்கவேண்டும் என்றும் தலைவி கூறுவதிலிருந்து கணவன் மனைவி அன்பும், உறவும் ஒப்புயர்வற்றது என்பது புலனாகின்றது.

**மக்கட் செல்வம்**

இல்வாழ்வின் பயன் நன்மக்கட்பேறு. கனிந்தகாதல் வாழ்வின் முதிர்ந்த விளைவாகிய மக்கட்பேறு இன்றேல் மாந்தர் வாழ்வே இல்லை. குடும்பம் ஒரு கோவிலாக மாறவேண்டுமெனில் கணவன் மனைவி பிணைப்பு மட்டுமின்றி குழந்தைகளும் சேர்ந்த ஒருகூட்டு வாழ்க்கைமுறை வேண்டும். இவ்வுலக வாழ்வும் மறு உலகவாழ்வும் வளமடைய குழந்தைப்பேறு அவசியம் என எண்ணினர். குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கு மறு உலகவாழ்வு இல்லை என நம்பினர். குழந்தைப் பேறு வேண்டும் என்பதை அகநானூறு,

**"இம்மைஉலகத்து இசையொடுவிளங்கி**
**மறுமைஉலகமும் மறுவின்றிஉய்ய"** (அகம் - 66)

என்ற வரிகளின் மூலம் குறிப்பிடுகின்றது.

பிள்ளைகளைப் பெறுவதோடு மட்டுமல்லாமல் கடமைகளை உணர்ந்தவர்களாக இருந்தனர் அக்காலமக்கள். பிள்ளைகளை கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாக வாழ்ந்தனர்.

**"ஈன்றுபுறந் தருதல் என் தலைக் கடனே**
**சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே"**

எனப் புறநானூற்றுத் தாய் கூறுவதன் மூலம் பெற்றோரின் கடமைகளை உணரமுடிகின்றது.

**பொருள் ஈட்டுதல்**

பழந்தமிழ் சமுதாயத்தில் பொருள் ஈட்டுதல் என்பது ஆண்களுக்குரிய கடமையாகும். ஆடவர்கள் பொருள் தேடிவருவதையும், பெண்கள் செம்மையான முறையில் இல்லற வாழ்வு நடத்துவதையும் தங்கள் கடமைகளாகக் கொண்டிருந்தனர். இதனை,

**"வினையேஆடவர்க் குயிரே மனையுறை**
**மகளிர்க்குஆடவர் உயிரே"** (குறுந் - 135)

என்ற குறுந்தொகைப் பாடல் கூறுகிறது.

தமிழ்நூல்கள், செல்வத்தை நன்கு ஈட்டித் திரட்டி நல்லவழியில் தனக்கும் பிறர்க்கும் பயன்படுத்தவேண்டும் என்று கூறுகிறது. பொருளல்லாதவரை பொருளாகச் செய்யும் பொருள் என்ற கூற்றிற்கேற்ப, இல்லறம் சிறக்க அன்புமட்டுமல்ல, அன்பு கொண்டு செயல்களைச் செய்ய பணமும் தேவைப்படுகிறது. பண்டைய மக்கள் உழைப்பின்றி குறுகிய வழியில் பணம் சேர்க்க விரும்பவில்லை. உடலுழைப்பால் பொருளை ஈட்டினர். அப்பொருளை ஈட்ட வெகுதொலைவு சென்றனர். அவ்வாறு ஈட்டும் பொருளைதான் மட்டும் அனுபவிக்காமல், இல்லாதவர்களுக்கும் கொடுத்து, அவர்களும் மகிழ்ச்சியடைந்தனர் என்பதை,

**"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க் கில்லெனச்**
**செய்வினைனகம்மிகஎண்ணுதி"** (குறுந் - 63)

என்ற வரிகளில் பொருளீட்டி, அப்பொருளை பிறருக்கும் கொடுத்து தானும் இன்புறுவதே இல்லறவாழ்வின் சிறப்பாக இருந்தது என்பதைஅறியமுடிகின்றது.

திருமணமாவதற்குமுன் செலவும் தொடர்பும் பொறுப்பும் குறைவு. மணமானபின் தன் குடும்பம் என்றகட்டு ஏற்படுவதால் உறவுகள் பெருகுகின்றன. உலகத் தொடர்புகள் விரிகின்றன. பெற்றோர், மனைவி, மக்கள் இவர்களைப் போற்றவும், உறவினர்களுக்கும் ஊரார்களுக்கும் உதவவும், வறியவர்களுக்கு வழங்கவும், தம்மை இகழ்ந்து செருக்கித் திரிவாரை அடக்கவும் பொருளின் துணைவேண்டும் என்பதை,

**"கேள்கேடுன்றவும் கிளைஞராகவும்**
**கேளல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்"** (அகம் - 93)

என்ற அடிகளின் மூலம் நமக்குப் புலப்படுத்துகின்றது.

தலைவன் பொருளைவிட, காதல் மனைவியின் அன்பு முக்கியம் என்று கருதினாலும், பொருளே அறவாழ்க்கைக்கு மிகவும் தேவை என்பதை உணர்ந்து,

**"வருக என்னுதியாயின்**
**வாரேன் நெஞ்சம் வாய்க்கநின் வினையே"** (அகம் - 131)

என்று கூறுவதிலிருந்து அறியமுடிகின்றது. பொருள் என்பது எல்லாக் காலத்திலும் மதிப்புடையதாக இருப்பினும் அதனை அறம் சார்ந்ததாகக் கூறும் கருத்து சங்ககாலத்தில் இருந்தது. சங்கத் தமிழர்கள் அளவுக்கதிகமாகப் பொருளைச் சேர்க்க விரும்பவில்லை. அறம் செய்யவும், விருந்துபோற்றவும் தேவையான பொருளை மட்டுமே ஈட்டினர்.

**'அறன்கடைப் படாஅவாழ்க்கையும் என்றும்'** (அகம் - 155)

என்ற அடியின் மூலம் அறியலாம். அறவழியில் பொருளீட்டித் தானும் இன்பம் துய்த்து பிறர்க்கும் ஈந்து அவர்களையும் இன்புறுத்தி வாழ்வதே பண்டைத்தமிழரின் வாழ்க்கை நெறி என்பதை நாம் நன்கறியலாம்.

வாழ்க்கை ஒரே தன்மையுடையதாக எப்போதும் இருப்பதில்லை. தொடர்ந்துதுன்பமோ, அல்லது தொடர்ந்து இன்பமோ இருப்பதில்லை. துன்பம் வந்தால் பின் இன்பம், இன்பம் வந்தால் பின் துன்பம் இது தான் இயல்பு. அதாவது இன்பமும் துன்பமும் கலந்த ஒன்றுதான் வாழ்க்கை. தேய்தலும் வளர்தலும் போல், பிறப்பு ஒன்று நிகழ்ந்தால் இறப்பும் நிச்சயம் உண்டு என்பதனை தெளிவாக உணர்ந்திருந்தனர் பண்டையகால மக்கள். ஒருவீட்டில் சாவுப்பறை ஒசைகேட்கிறது. இன்னொரு வீட்டில் மணமுரசு ஒலிக்கின்றது. சாவுவீட்டில் பூக்களை நீக்குகின்றனர். மணவீட்டில் அணிந்து கொள்கின்றனர். சேர்ந்தோர் மகிழ்கின்றனர். பிரிந்தோர் அழுகின்றனர். இதுதான் இவ்வுலகின் நியதி. இதில் இனியவற்றைச் செய்வதே நம் இயல்பாகஅமையவேண்டும் என்பதை,

**"ஓர் நெல் நெய்தல் கறங்கஓர் இல்**
**ஈர்ந் தண் முழவின் பாணிததும்பப்**
**புணர்ந்தோர் பூ அணிஅணியப் பிரிந்தோர்**
**பைதல் உண்கண்பனிவார் புரைப்ப"** **(புறம் - 194)**

என்ற பாடலின் மூலம் அறிய முடிகின்றது. பருவகாலங்கள் மாறி மாறி வருவது போன்று இவ்வுலக வாழ்விலும் இன்ப துன்பங்கள் மாறிவரும். சேர்தல் பிரிதல் ஆகியன மாறிமாறியே அமைகின்றன. இவை தான் இயல்பு என்று உணர்ந்தவர்கள் இன்பத்தில் துள்ளியும், துன்பத்தில் வீழ்ந்தும் கிடவார். இது ஒரு வாழ்வியல் அறம் என்று பாகைச் சாத்தன் பூதனார் கூறுவதை,

**"இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்**
**நண்பகல் அமையமும் இரவும் போல,**
**வேறுவேறு இயலவாகி, மாறுஎதிர்ந்து**
**உள"** **(அகம் - 327)**

என்ற பாடல் வரிகளின் மூலம் உணரமுடிகின்றது.

## தொகுப்புரை

குடும்ப உறவுகளில் கணவன் மனைவி உறவே இறுதிவரை நிலைத்து நிற்கக் கூடியதாய் இருக்கிறது. இல்லத்தலைவி குடும்ப விளக்காகத் திகழ்வதையும், ஆழமான அன்பையும், விட்டுக் கொடுக்கும் பண்பையும், தலைவனைத் தன் உயிர் போல் போற்றுவதையும், இல்வாழ்வின் பயன் சிறந்த மக்கட்பேறு என்பதனை உணர்ந்து, புதல்வர்களை ஈன்று நன்முறையில் போற்றி வளர்ப்பதையும் காணமுடிகின்றது. 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்ற வள்ளுவரின் கூற்றிற்கேற்ப மனித வாழ்வின் முன்னேற்றத்திற்கு பொருள் தேவை என்பதனை நன்குணர்ந்து பொருளைத் தேடியதையும், கல்வியின் சிறப்பு அறிந்து கற்றதையும், வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் கலந்த கலவை என்ற உண்மையை உணர்ந்து வாழ்ந்ததையும் நாம் அறிந்து கொள்ளமுடிகின்றது.